தலைமைச் செயலகத்தில், நேற்று (24.7.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2024 தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதலமைச்சரின் செயலாளர்I, நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், முதன்மைச் செயலாளர்/ முதலமைச்சரின் செயலாளர்II மருத்துவர் பு.உமாநாத், முதலமைச்சரின் செயலாளர்III மா.சு.சண்முகம், முதலமைச்சரின் செயலாளர்IV திருமதி அனுஜார்ஜ், உலக முதலீட்டாளர் மாநாட்டின் சிறப்பு அலுவலர் அருண் ராய், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் செயலாளர் திருமதி மரியம் பல்லவி பல்தேவ், தொழில் வழிகாட்டியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, தொழில் வழிகாட்டி நிர்வாக இயக்குநர் நிஷாந்த் கிருஷ்ணா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காவலர்கள் - பொதுமக்கள் நல்லுறவை மேம்படுத்தும் வகையில்

# 250 காவல் நிலையங்களில் ரூ 10 கோடி மதிப்பில் சிறப்பு வசதிகள்!

## நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூலை 25- காவலர்கள் மற்றும் பொதுமக்கள் நல்லுறவை மேம்படுத்தும் வகையில் காவல் நிலையங்களில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் சிறப்பு வசதிகள் ஏற்படுத்திட முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

அதன் விபரம் வருமாறு :

காவல் துறையினர் பொதுமக்களை நண்பர்களாகக் கருதி, அவர்களிடம் கண்ணியத்துடனும், கருணையுடனும் நடந்து கொள்வதை உறுதி செய்ய தமிழ்நாடு அரசு பல பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. காவலர்கள் மக்கள் தொடர்பை மேம்படுத்த காவல் பணியாளர்களுக்கு அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி உதவியுடன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் காவல்துறை - பொதுமக்கள் இடையே "அன்பான அணுகுமுறை" என்ற நிலையை பேணிப்பாதுகாக்க இவ் வரசு உறுதிபூண்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக, "காவல் நிலையங்களை அணுகும் பொதுமக்களின் வசதிக்காக முதற்கட்டமாக 250 காவல் நிலையங்களுக்கு தலா 4 இலட்சம் ரூபாய் செலவில் வரவேற்பறை, பார்வையாளர்களுக்கான கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் மற்றும் காத்திருப்புக் கொட்டகைகள் ஆகியவை மொத்தம் 10 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2023-2024ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையிலும், காவலர் மற்றும் பொதுமக்கள் நல்லுறவை மேம்படுத்தும் பொருட்டும் 250 காவல் நிலையங்களில், வரவேற்பறை, பார்வையாளர்களுக்கான கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் மற்றும் காத்திருப்பு கொட்டகைகள் போன்ற சிறப்பு வசதிகளை ஏற்படுத்திட ரூபாய் 10 கோடி வழங்குவதற்கு நிருவாக ஒப்பளிப்பு செய்து முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்மூலம், காவல் நிலையங்கள் நவீனமயம் ஆக்கப்படுவதோடு, அனைத்துத் தரப்பு மக்களும், குறிப்பாக மாற்றுத்திறனாளிகள், பெண்கள் மற்றும் வயதானவர்கள் அணுகக்கூடிய வகையிலும், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யும் விதமாகவும், பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் இடமாகவும் காவல்நிலையங்கள் அமையும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பப் பதிவு முகாம்!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆய்வு!

*சென்னை, ஜூலை 25 -*

*பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், சிந்தாதிரிப் பேட்டை F1 காவல்நிலையம் அருகில் உள்ள சமுதாயக் கூடத்தில் நேற்று (24.07.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமினை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*இந்த சமுதாயக் கூடத்தில் 3 நியாய விலைக் கடைகளுக்கான 6 முகாம்கள் நடைபெறு வதையும், தன்னார்வலர்கள் மூலம் நடைபெறும் விண்ணப்பங்கள் பதிவு நடவடிக்கைகளையும் பார்வையிட்டு, அங்கு வருகை தந்த மக்களிடம் கலந்துரையாடி அவர்கள் வழங்கிய ஆவணங்களை சரிபார்த்து அதன்படி விண்ணப்ப பதிவு நடைபெறுவதை ஆய்வு செய்தார்.*

*இதனைத் தொடர்ந்து, வார்டு56, மண்ணடி, ஜீல்ஸ் தெருவில் உள்ள நகர்ப்புர நலவாழ்வு மையத்தில் நடைபெற்ற முகாமினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த முகாமில் 1 நியாய விலைக் கடைக்கான 3 முகாம்கள் நடைபெறுவதையும், விண்ணப்பங்கள் பதிவு நடவடிக்கைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அங்கு விண்ணப்ப பதிவு மேற்கொள்ளும் தன்னார்வலர்களிடம் விண்ணப்பங்களை துல்லியமாகவும், விரைவாகவும் பதிவு செய்திடும்படியும் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.*

*இந்த ஆய்வின் போது, மாநகராட்சி கூடுதல் தலைமைச்செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மண்டல கண்காணிப்பு அலுவலர் டாக்டர் கே.விஜய கார்த்திகேயன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம். சிவகுரு பிரபாகரன், மண்டல அலுவலர் ஜி.தமிழ் செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்.*

மணிப்பூர் கொடூரம்: ஒன்றிய அரசைக் கண்டித்து

# தமிழ்நாடு முழுவதும் கழக மகளிரணியினர் ஆர்ப்பாட்டம்!

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கம்!

*சென்னை, ஜூலை 25-*

*மணிப்பூர் மாநிலத்தில் நடைபெற்று வரும் உச்ச பட்ச கொடூரங்களை தடுக்கத்தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசையும், பிரதமர் மோடியையும் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் கழக மகணிரணியினர் ஆயிரக்கணக்கணக்கில் திரண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*தலைமைக் கழக அறிவிப்பின்படி கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சென்னையில் நேற்று முன் தினம் (23.7.2023) சென்னையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார். அவருடன் மகளிரணியினர் ஆயிரக்கணக்கில் பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.*

*மணிப்பூரில் நடைபெற்று வரும் சம்பவங்களை ஒன்றிய பா.ஜ.க. அரசும், மாநில பா.ஜ.க. அரசும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.*

*இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கடும் கண்டனத்தை பதிவு செய்து, தி.மு.க. சார்பில் மகளிரணியினர் மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள் என்று அறிவித்தார்.*

*அதையடுத்து தலைமைக் கழகம் சார்பில் கீழ்க்கண்டவாறு அறிக்கை வெளியானது.*

*பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்தைக் கட்டுப்படுத்த தவறிய நிலையில், சமீபத்தில் பெண்கள் இருவர் நிர்வாணப் படுத்தப்பட்டு வீதியில் ஊர்வலமாக இழுத்துச் சென்று கற்பழிக்கப்பட்ட, மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்ததாக, ஊடகச் செய்திகள் தற்போது வெளிவந்துள்ளது. அனைவரின் உள்ளத்தையும் பதற வைத்துள்ளது. தாய்மையை அவமானப்படுத்தும் இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்கத் தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.*

*இக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசும் மகளிருக்கெதிரான இக்கொடுமைகளைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது.*

*மணிப்பூர் கலவரம் தொடங்கிய நேரத்திலேயே தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்கள், தனது கண்டனத்தையும், கவலையையும் சமூக ஊடக வாயிலாக வெளிப்படுத்தினார்.*

*இச்சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான நெஞ்சைப் பதற வைக்கும் இக்கொடுமையைக் கண்டித்து, 23.07.2023 அன்று சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே மாலை 4 மணியளவில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.*

*தொடர்ச்சியாக (24.07.2023 - அன்று திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர்கள், மகளிர் அணி அமைப்பாளர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டங்களை சிறப்பாக நடத்தினர்.*

*இவ்வாறு தலைமைக் கழகம் அறிவித்திருந்தது.*

*அதையடுத்து நேற்று முன்தினம் சென்னையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் சிற்றரசு மற்றும் மகளிரணி நிர்வாகிகள் உட்பட ஆயிரக்கணக்கான மகளிர் பங்கேற்று மோடி அரசை கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.*

*தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் - மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான மகளிரணியினர் திரளாகப் பங்கேற்றனர்.*

பொதுமக்களைப் பாதிக்கின்ற

# சுங்கக் கட்டண உயர்வை உடனே ரத்து செய்க!

## மக்களவையில் திமுக எம்.பி தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை!

*புதுடெல்லி, ஜூலை 25-*

*தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் விதி எண் 377ன் கீழ் சுங்கக்கட்டணம் அதிகரிப்பு பற்றிய கோரிக்கையை வலியுறுத்தினார்.*

*அதன் விவரம் வருமாறு :*

*ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், கடந்த ஆண்டு நவம்பர் மாதம், நெடுஞ்சாலைகளின் சுங்கக்கட்டணம் 40 சதவீதம் குறைக்கப்படும் என்றார். இதைப்போல கடந்த மார்ச் மாதம் 60 கி.மீ. சுற்றளவில் உள்ள 16 சுங்கச்சாவடிகள் அகற்றப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது. மேலும் பயண தூரத்தின் அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.*

*ஆனால், இந்த விஷயத்தில் தமிழ்நாட்டை கண்டு கொள்ளவில்லை.*

*தமிழ்நாட்டில் மாநகராட்சி மற்றும் நகராட்சி வரம்பில் மாநில நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்திய பின் அமைக்கப்பட்டுள்ள 14 சுங்கச்சாவடிகளை அகற்ற வேண்டும் என்பதும், பயனீட்டாளர் கட்டணத்தை 40 சதவீதம் குறைக்க வேண்டும் என்பதும், 60 கி.மீ. சுற்றளவில் உள்ள சுங்கச்சாவடிகளை அகற்ற வேண்டும் என்பதும் தமிழ்நாடு அரசின் கோரிக்கை. ஆனால், இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

*நாட்டில் 566 சுங்கச் சாவடிகள் செயல்படுகின்றன. இதில் தமிழ்நாட்டில் தான் அதிகம் என்கிற வகையில் 55 சுங்கச்சாவடிகள் உள்ளன. இந்த 55 சுங்கச் சாவடிகளில் 29 இடங்களில் தற்போது கூடுதல் கட்டணம் வசூலிப்பதற்கு ஏற்ற வகையில் கட்டணங்கள் திருத்தி அமைக்கப்பட்டு உள்ளன. இந்த கட்டண உயர்வு வணிகர்கள் மற்றும் வாகன உரிமையாளர்களை மட்டும் பாதிப்பது இல்லை. அந்த வழியாக கொண்டு செல்லப்படும் பொருட்கள் மீதும் கூடுதல் விலை சுமத்தப்பட்டு பொதுமக்களையும் பாதிக்கும்.*

*எனவே மாநில அரசின் கோரிக்கை மற்றும் உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அமைச்சகம் இந்த கட்டண உயர்வு உத்தரவை உடனே ரத்து செய்ய வேண்டும்.*

*இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தி உள்ளார்.*

நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையில்

# 14 ஆய்வாளர்கள் உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு!

*சென்னை, ஜூலை 25- உச்சநீதிமன்றம் நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையில் பதவி உயர்வு அளிக்கும்போது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினை பின்பற்றி பதவி உயர்வு அளிக்கும்படி தீர்ப்புரை வழங்கியது.*

*உச்சநீதிமன்றம் வழங்கிய ஆணையின்படி நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறையில் 2004ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட உதவி இயக்குநர் பதவி உயர்வு பட்டியல்களில் பணிமூப்பின் உரிய திருத்தங்கள் செய்து ஆய்வாளர்களாக பணிபுரிந்த 3 நபர்களுக்கு உதவி இயக்குநராக பதவி உயர்வு வழங்கி, அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன. தற்போது, 2022-ஆம் ஆண்டிற்கான காலிப்பணிடங்களுக்கு ஆய்வாளர்களாக பணிபுரியும் 14 நபர்களுக்கு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு ஒன்றியத்தில் வருகின்ற (27.7.2023 வியாழக்கிழமை) அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகையை முன்னிட்டு நடைபெற்ற அவசரச் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, திருப்போரூர் ஒன்றியப் பெருந்தலைவர், திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஜி.சி. அன்புசெழியன், எம்.ராஜாராம், ஏ.ரமேஷ், எஸ்.ராமகிருஷ்ணன், ஏ.கருணகரன், மு.மயில்வாகனன், என்.ஜி.கெஜராஜன், ஆர்.கோவிந்து, வி.விஜயகுமார், எஸ்.ஜெகதீப், செ.எல்லப்பன், க.கௌரிசங்கர், ம.ஜெகன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! டி.மோகன்தாஸ் வரவேற்புரை!

# இடைக்கழிநாடு பேரூரில் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் - க.செல்வம் எம்.பி. - முன்னணியினர் சிறப்புரை!

*காஞ்சிபுரம் ஜூலை 25 -*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இடைக்கழிநாடு பேரூர்க் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம், நாளை (26.7.2023 - புதன்கிழமை) மாலை 4 மணிக்கு விளம்பூரில் நடைபெறுகின்றது.*

*இவ்விழாவில் இடைக்கழிநாடு பேரூர் - லத்தூர் தெற்கு ஒன்றியம் கருங்குழி பேரூர் - கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.*

*விழாவிற்கு - பொதுக் கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். பேரூர் கழகச் செயலாளர் டி.மோகன்தாஸ் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். எம். அருணா, ஆர்.ரஞ்சிதகுமார், பி.சங்கர், சாந்தி முருகேசன், ஆர்.சசிகுமார், எஸ். பக்தவச்சலம், எம்.எச்.பக்ருதீன் அலி, முகமது, எம். நாகூர் மீரான், பி.பஷீர், சி. ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*பொற்கிழி மற்றும் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.*

*இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., எஸ்.இனியரசு, ப. அப்துல் மாலிக், ஒன்றியக் குழுத் தலைவர் டாக்டர் ஆர்.டி.அரசு, வி.ஏழுமலை, ஏ.சிற்றரசு, சம்யுக்தா அய்யனார், கே.எஸ். ராமச்சந்திரன், எம்.எஸ்.பாபு, எ.சரவணன், ஏ.சுந்தரமூர்த்தி, சுபலட்சுமிபாபு, பிரேமா சங்கர், கிருஷ்ணவேணி தணிகாலசம், கே.எஸ். ஆதிகேசவலு, எம்.வஜ்ரவேலு, எ.என்.பாரத், டி.சாமிநாதன், க.பால்ராஜ், கலைச் செல்வி ஜெகநாதன், ஆர். ஜெகதீஸ்வரன், சிவகணேசன், டி.பாலசுந்தரம், டி. சந்திரன், பெரு. கிருஷ்ணன், சி.பி. ரவிக்குமார், ஜி.தர்மன், எம்.வசந்தராஜ், எம். கண்ணகி, கே.பூபாலன், டி.வரதராஜ், க.நிர்மல்குமார், அ.முரளி, ஜெயந்தி, ராமைய்யா, விஜயன், செ.ஐயப்பன், கே.குமரேசன், கே.எஸ்.ஜெயராமன், பெருமாள், வி.விநாயகமூர்த்தி, டி.சங்கரலிங்கம், வி.ஏ. காஜாமொய்தீன், எஸ்.தட்சிணாமூர்த்தி, ஜி.விஷ்ணுவர்தன், அஞ்சுகம் சங்கர், பி.தேசமுத்து, கே. அன்னப்பன், சி.கந்தன், ஏ.சுந்தரமூர்த்தி, டி. அருள் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.*

*ஆ.மணி கண்ணன் நன்றி கூறுகிறார்.*

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு56, மண்ணடி, ஜீல்ஸ் தெருவில் உள்ள நகர்ப்புர நலவாழ்வு மையத்தில் நேற்று (24.07.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமினை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மண்டல கண்காணிப்பு அலுவலர் டாக்டர் கே.விஜயகார்த்திகேயன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், மண்டல அலுவலர் திரு.ஜி.தமிழ்செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்.